**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC.643/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : பாலகிருஷ்ணன் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : லெட்சுமணன் | Age | : 69 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20.09.2024.**

**முதல் விசாரணை**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி குடும்ப செலவிற்காகவும் மருத்துவ செலவிற்காகவும் 28.04.2023 ம் தேதி என்னிடம் ரூ.1,93,000/- கடன் பெற்றுள்ளார். அதற்காக எதிரி அவர் கணக்கு வைத்துள்ள பந்தநல்லூர் கிளை இந்தியன் வங்கியின் 28/07/2023 தேதியிட்ட ரூ. 1,93,000/-க்கான காசோலையை அளித்தார். (**அந்த காசோலை பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள ஆடுதுறை கனரா வங்கியில் 28/07/2023 அன்று வசூலுக்காக தாக்கல் செய்தேன். ( மேற்படி செலுத்து சீட்டு **பு.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) ஆனால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று 01/08/2023 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக

திருப்பபட்டது. ( **மேற்படி திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு கடந்த 09/08/2023 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். (**அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி அறிவிப்பினை 10/08/2023 அன்று எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். (**மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையதள ஒப்புகை ரசீது பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனவே என்னிடம் கடன் பெற்று தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்து எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**